
## III. வேதவினா குறுக்கெழுத்துப் போட்டி - 96

**யாத்திராகமம் 36—40 அதிகாரங்கள்**




Book - Post

பெறுநர் : திரு/ திருமதி

↓↓↓

1. வாசஸ்தலத்தின் மேற்புறத்தில் போடப்பட்ட பலகைகள் (2)
3. மார்ப்பதக்கத்தின் மூன்றாம் பத்தியில் பதிக்கப்பட்ட கற்கள் (3, 5, 4) கடைசி 5 எழுத்துக்கள் →

→→→

1. வாசஸ்தலத்தின் மேல் கூடாரமாக போடப்பட்ட மூடுதிரை எதனால் செய்யப்பட்டது? (8)
2. ஏபோத்தின் கீழ் அங்கி முழுவதும் எதனால் நெய்யப்பட்டது? (7) கடைசி எழுத்து ↑
4. பசும் பொன்னினால் அடிப்பு வேலையாய் உண்டாக்கப்பட்டது எது? (7)
8. வாசஸ்தலத்தின் பலகைகள் .................... மரத்தால் செய்யப்பட்டது. (4)
9. கிருபாசனத்தின் இரு ஓரங்களிலும் ஏக வேலைப்பாடாக செய்யப்பட்டவை எவை? (6)
10. வடபக்கத்துத் தொங்குதிரைகள் ................... முழம் (2)
14. கர்த்தருடைய ......................... வாசஸ்தலத்தை நிரப்பிற்று (3)

↑↑↑

12. கிருபாசனம் .................................. செய்யப்பட்டது (8)

←←←

5. முதலாம் மாதம் முதல் தேதியில் ....................... ஸ்தாபிக்கப்பட்டது. (6)
6. ..................... அவர்களை ஆசீர்வதித்தான். (2)
7. மேற்கு பக்கதுத் தொங்கு திரைகள் .................... முழம். (4)
11. இஸ்ரவேல் புத்திரரின் நாமங்கள்.................. கற்களில் வெட்டப்பட்டது. (5)
13. சாட்சிப் பெட்டியில் எது வைக்கப்பட்டது? (9) கடைசி எழுத்து ↓



SSA

# ஆரோனின் துளிர்த்த கோல்

வேதம் அறிவோம், தேவர்களாவோம்

THE SPROUTED STAFF OF AARON

மாத இதழ் : ஜுலை 2020

## யாத்திராகமம் 15:11

**கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும் அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்?**

## TWINKLE, TINKLE & TATTLE - 1 Peter 5:6-11

A man was repeatedly robbed by burglars who entered his house through a window while he was asleep. He finally solved his problem by using three things. He called them a twinkler, a tinkler, and a tattler. The twinkler was a candle that he kept burning in the window all night. The tinkler was a bell attached to the window. And the tattler was a small, noisy dog.

Every Christian lives in a house that Satan seeks to burglarize. We too need a twinkler, a tinkler, and a tattler. The twinkler is the candle of God's word. Daily attention to the Word keeps the lamp bright. The tinkler is the bell of our testimony. Keep it ringing as you tell others of the Savior, and Satan will be frustrated. The tattler is the life of prayer. When the enemy comes, send up the warning that you are telling Jesus about it all. Yes, Twinkle, tinkle, and tattle!

**அன்புடையீர், வணக்கம்.**

# உன்னாலே கூடுமென்று உன்னைக் குறித்து கேள்விப்பட்டேன்.

அன்று கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டது. வாதை தொடங்கிற்று என்று மோசே சொன்னார். ஆசாரிய பட்டத்திற்கு அடிதடி. லேவியரை கோராகு இருநூற்று ஐம்பது நபர்களோடு தேவ மனிதனாகிய மோசேக்கு முன்பாக எழும்பினார்கள். அதின் விளைவு அனைவரும் அறிந்ததே. பூமி தம்மையும் விழுங்கிப் போகும் என்று சொல்லி ஓடினார்கள் இஸ்ரவேல் சபையோர்.

அன்று தங்கள் ஆத்துமாக்களுக்கு கேடுண்டாக்கின அந்த பாவிகளின் வெண்கல தூப கலசங்கள் பரிசுத்தமாயின, இஸ்ரவேல் புத்திரருக்கு அடையாளமாயின, ஞாபகக்குறியாயின. இவ்வளவு நடந்த பிறகும் வணங்கா கழுத்துள்ள இஸ்ரவேல் சபையோர் சுத்திகரிக்கப்படவில்லை. அக்கினி கர்த்தருடைய சந்நிதியிலிருந்து புறப்பட்டு, சுட்டெரிக்கப்பட்டு சாம்பலாய் போன சகோதரர்களை பார்த்த பின்னராவது தங்களை தாழ்த்தாமல் பன்றிகளைப் போல முறுமுறுப்பு என்னும் சாக்கடையில் மூழ்கிக்கிடந்தனர். தம்பியான மோசேயின் சொற்கேட்டு தமையனான ஆரோன் சபையின் நடுவில் ஓடினான், பாவநிவிர்த்தி செய்து நடுவே நின்றபோது வாதை நிறுத்தப்பட்டது. வாதையினால் செத்துப்போனவர்கள் பதினாலாயிரத்து எழுநூறுபேர் (எண்ணாகமம் 16:1-50)

கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடுங்கோபம் புறப்பட்டிருக்கும் இவ்வேளையில் புறஜாதியார், உன்னாலே கூடுமென்று உன்னைக் குறித்து கேள்விப்பட்டேன் என்று நம்மைக் குறித்து சாட்சி பகருவார்களா? ஒவ்வொரு விசுவாசியும் தன்னைத்தானே உய்த்து ஆராய்ந்து சோதித்தறியும் வேளை இது. (செப்பனியா 2:2)

பெல்ஷாத்சார் தானியேலுக்கு சான்றிதழ் வழங்குகிறார் அதில், உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும் புத்தியும் விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டேன். (தானியேல் 5:14) மறுபடியும், பொருளை வெளிப்படுத்தவும். கருகலானவைகளைக் தெளிவிக்கவும். உன்னாலே கூடுமென்று உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டேன் என்கிறார். (தானியேல் 5:16) இன்று தம்மைக் குறித்த சாட்சி என்ன? இக்கட்டான இவ்வேளையில் மற்றவர்கள் நம்மைக் குறித்து கேள்விப்படுவது என்ன? அவர்கள் மன்றாடுகிறவர்கள், கொடுத்து உதவுகிறவர்கள், விசாரிக்கிறவர்கள், அவர்களிடம் தேவ ஞானம் விளங்கும், அவர்களிடம் பேசினால் நமக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நற்சாட்சி எழும்புகிறதா என்பதை மிகுந்த எச்சரிப்போது நம் ஆத்மாவிடம் கேட்போம். தேவன் தாமே நாமிருக்கும் இடங்களில் நம்மை பலத்த சாட்சிகளாக எழும்பப் பண்ணி நம் மூலமாய் தம்முடைய பராக்கிரமத்தை வெளிப்படுத்துவாராக. அர்பணிப்போம், அடிப்பணிவோம். ஆமென்.

திருமதி. **எஸ்தர் இராபின்சன்,** சென்னை



**கடந்த மாத வேதவினா குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவர்கள் செல்வி / செல்வன்/ திருமதி / திருவாளர்.**

**I.** 1. சாரா லின்சி கோல்டு, 2. ஷரன் ரூத், 3. பிரியா ஜெனிட்டா, 4. G. ஜெஃப்ரி, 5. லியோனல் பர்னபாஸ், 6. சோபனா பிரேம் கேத்தரின், 7. ஹெப்சி பானுமதி.

**I & III.** 1.J. கெத்சி செல்வாபாய், 2. J. சோபியா பிரேமி

**II & III.** 1. ஜீவகி தாமஸ், 2. S. தனபாக்கியம், 3. வசந்தா செல்வராஜ், 4. ஹேமலதா ஜெயசந்தர், 5. மத்தேயு மார்க், 6. ராணி வில்சன், 7. விஜயலலிதா, 8. சாந்தி குணா, 9. ரூத் வயலட் வசந்தா, 10. ஃபான்சி, 11. ரோப்பா கிறிஸ்டல், 12. T. சுகந்தா, 13. பிரேமா பெஞ்சமின், 14. ஜாய்ஸ் மணிமொழி, 15. பத்மாவதி ஞானப்பிரகாசம், 16. சந்திரா சைமன், 17. A.V. வர்ஜீனியா, 18. எஸ்தர் ராபின்சன் (திருச்சி), 19. R. ஜேனட், 20. H. ஸ்நேகா, 21. காந்தா மனோகரன், 22. வைலட் சாமிக்கண், 23. அன்னமேரி ராஜ், 24. ஜான் அரசி, 25. ஏஞ்சலின் சிந்தியா, 26. பியூலா நவமணி, 27. I. டெய்சி, 28. தனம் ஃபேன்சி, 29. S. செல்வமணி, 30. லிடியா மரகதம், 31. சுகந்தி ஜோன்ஸ், 32. ஜாய்ஸ் சுசீலா தேவி, 33. பீட்டர் தாமஸ்,


**III.** 1. மாலா கிறிஸ்டி நெப்போலியன், 2. குணதிலகா யோனத்தான், 3. M. பத்மாவதி, 4. M. எலிசபெத் ராணி, 5. சகுந்தலா தனராஜ், 6. ஏஞ்சலின் பியூலா, 7. கவின் ஹென்றி, 8. தேவதாஸ் செல்வக்குமார்

**I, II & III.** 1. ரூபல்லா அற்புதராஜ், 2. ஜாய் ஜோசப், 3. பாலின் மார்டீன், 4. பிரேமா வில்சன், 5. பெபல் ஜீவகி தாமஸ், 6. பிரேமலதா தியாகராஜன், 7. ரெஜினாமேரி மனோகரன், 8. மல்லிகா எட்வின், 9. ரோசலின் திலகவதி, 10. சந்திரா இம்மானுவேல், 11. சூசன் சுமித்ரா, 12. மார்கிரேட் எலிசபெத், 13. விமலா ரோசபெல், 14. J. மிராண்டா, 15. மனோகரி பெஞ்சமின், 16. மோனிகாள் காந்திநாத், 17. ஜூலியா சார்லி, 18. திலகவதி அதிசயம், 19. ஜோசப் அதிசயம், 20. கீத்தா கிறிஸ்டோபர், 21. ஜெயசீலி பால்ராஜ், 22. ஷாலினி இம்மானுவேல், 23. எஸ்தர் ராபின்சன் (சென்னை) 24. ரீட்டா ரோசலிண்ட், 25. சாந்தி வில்லியம், 26. சாந்தி ஜோயல், 27. கிரேஸ் பிராங்கிளின், 28. ராணி சாந்தகுமார், 29. நிர்மலா டேவிட், 30. ஷீலா பாலக்குமார், 31. ஜேனட் குணா, 32. தேவ கிருபா, 33. ஜெயசீலி ரவிச்சந்திரன், 34. சுகந்தி ஹென்றி, 35. ஆலிஸ் ஜோசியா, 36. ஜீவா செல்வராணி, 37. R. பாக்கியராணி, 38. ராணி தனராஜ், 39. செலைன் ராணி டேவிட், 40. கிறிஸ்டினா பெஞ்சமின், 41. ரூபி காட்பிரே டேவிட், 42. இமெல்டா சுந்தர்சிங், 43. ஹெலன் சேசுராஜ், 44.கமலா ஜார்ஜ், 45. ருவல்யா அருள்பிரகாசம், 46. சலோமி எட்வின், 47. ஜவி கலாவதி, 48. ஜாஸ்மின் உஷாராணி, 49. விமலா குழந்தைசாமி, 50. ஒலிவியா லாங்டன், 51. ஜூலா கிரேஸ், 52. வினோத்பால், 53. M.S. ஜேம்ஸ், 54. சுகுணா எலிசபெத், 55. பியூலா ஜேசுராஜன், 56. நகோமி எடிசன்

பரிசு பெறுபவர்:

1. திருமதி. **ஜீவா செல்வராணி,** திருச்சி, 2. திருமதி. **எலிசபெத் ராணி,** ஈரோடு

# I. READ AND RECOGNISE : 40




Read and Recognise, வேதாகமப் புதிர், **வேதவினா குறுக்கெழுத்துப் போட்டிகளில்** அனைவரும் பங்கு பெறலாம். **25.07.2020**க்குள் விடை அனுப்பப்பட வேண்டும். குலுக்கல் முறையில் பரிசுகள் உண்டு.

பதில் அனுப்பப்பட வேண்டிய முகவரி :
திருமதி. **ஷர்ளி காலின்ஸ்**
120/4, சீயோன் ஆலய வளாகம்,
திருச்சி – 620 008.

**97914 09192 என்ற அலைபேசி எண்ணுக்கு கருப்பு மையில் பதிலையும் பெயரையும் தெளிவாக மத்தியில் எழுதி Whatsapp மூலம் அனுப்பலாம்.**

## Guidelines :

a. Bible Portion : John 3 & 4 Chapters

b. All answers begin with the letter "S"

c. Letters can be used any number of times.

d. Give the reference.

**Questions :**

1. John also was baptizing at Aenon near ....................
2. As Moses lifted up the ............. in the wilderness, .......... must the .................... of Man be lifted up.
3. The Father is ............. such people to worship him.
4. He who is of earth belongs to earth and ............. in an earthly way.
5. Many ........... from that town believed in him because of the women's testimony.
6. Can he enter a ............ time into his mother's womb and be born?
7. .............., I perceive that you are a prophet.
8. Jesus came to a town of ............. called ................
9. That which is born of the flesh is flesh and that which is born of the .............. is ................
10. God is ................, and those who worship him must worship in .................... and truth.

**Answers : I. Read and Recognise : 39 (John 1 & 2)**

| | | |
|---|---|---|
| **1. Now 1:44** | **4. not 2:4** | **7. next 1:29** |
| **2.not 2:24** | **5. Now 1:24** | **8. Nazareth 1:46** |
| **3. nor 1:5** | **6. Nathanel 1:45** | **9. name 1:6** |
| | | **10. neither, nor, nor 1:25** |





**தேவனது அதிசய மீட்பு தொடர்கிறது...**

தேவன் இஸ்ரவேல் மக்களின் அவநிலையையும், அழுகையையும், அபயக்குரலையும் கேட்டு தாம் செய்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார். தம் மக்களது நலனின் அக்கறை கொண்டு எப்பொழுதும் செயல்படும் ஆண்டவராக இருக்கிறார். மோசேக்கு தேவ பர்வதமாகிய ஓரேபில் எரியும் முட்செடியில் தரிசனமாகி தம் மக்களின் நிலையை விவரித்து அவர்களை வழிநடத்த பார்வோனிடம் அனுப்புகிறேன்; நான் உன்னோடு இருப்பேன், நீங்கள் பயணப்பட்டு வரும்போது இம்மலையில் ஆராதனை செய்வீர்கள் என்ற நம்பிக்கையூட்டும் அடையாளங்களைக் கூறுகிறார்.

செங்கடலுக்கும், அக்வாபா குடாவிற்கும் இடையே உள்ள முக்கோண வடிவ தீபகற்பம் சீனாய் ஆகும். இதற்கு கிழக்கே அரேபிய தீபகற்பமும், தெற்கே இந்திய பெருங்கடலும், மேற்கே செங்கடலும் ஆப்பிரிக்க நிலபகுதியும் வடக்கே ஒருபுறம் இஸ்ரேல் நாடும் மறுபுறம் எகிப்து நாடும் உள்ளன. பெரும்பாலான பகுதி சிறிய தொடர் குன்றுகளாக உள்ளன. இதன் தென்முனையை ஒட்டி சீனாய் மலையும் (7500 அடி) சற்று வட மேற்காக ஒரேப் மலையும் (6500 அடி) அமைந்துள்ளன. இவை முறையே ஜெபல் முசா (மோசேயின் மலை), ராஸ்–எஸ்–சாஃப்–சாஃப் (**Ras - Es - Saf, Saf)** என அழைக்கப்படுகின்றன. மிக குறைவான மழைப் பொழிவை பெறுவதால் வனாந்திரமான பாலைநிலமாக காட்சியளிக்கிறது. எனவே பாலை தாவரமான முட்புதர்கள் அதிகம். செங்கடலை ஒட்டிய கடற்கரை பகுதியில் மரங்கள் அடர்ந்த இடம் உண்டு. இவை சீனாய் காடுகளாகவும், சோலைகளாகவும் உள்ளன. வேதத்தில் சீனாய் மலை, சீனாய் வனாந்திரம் பற்றி 35 முறையும் தேவபர்வதமாகிய ஓரேப் குறித்து 17 முறையும் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் பவுலடியார் சீனாய் மலையை ஆகாருக்கு உருவகப்படுத்தி எழுதுகிறார். (கலா. 4:25)

மனிதர்கள் மூலம் தேவன் செயல்படும்போது அவர்.

1) ஊழியரைத் தெரிந்தெடுக்கிறார். 3: 3,10

2) பெயர் சொல்லி அழைக்கிறார். 3:4

3) தாம் யார் என வெளிப்படுத்துகிறார் 3:6, 14 மோசேக்கு ளதேவன் தனது நாமம் **இருக்கிறவராக இருக்கிறேன்** என்று வெளிப்படுத்துகிறார். **(YHWH =** யாவே **YAHWEH =** யாஹ்வே) இதற்கு என்றைக்கும் வாழ்கின்ற கடவுள். அனைத்தையும் கடந்த நித்தியர், அனாதிதேவன் என்று பொருள். எபிரேய மொழியில் உயிர் எழுத்துக்களே கிடையாது. எனவே தேவன் நாமத்தை எவ்விதம் உச்சரிப்பது என மக்கள் அறியவில்லை. இஸ்ரவேலர் கடவுளின் பெயரை உச்சரிக்க தெரியாமலும், அஞ்சியும் 'அதோனாய்' (ஆண்டவர்) அழைத்தனர் அதிரிசமான தேவன் மனித அறிவுக்கு எட்டாதவர். அவ்வப்போது நெருப்பு, புயல், இடி, கடல்

அலை மூலம் தன்னை வெளிப்படுத்தினார்.

மனிதர்களுக்கு அவர் எவ்விதம் வெளிப்பட்டார்களோ, மனிதர்களை தேவனை எப்படி உணர்ந்தறிந்து கொண்டார்களோ, **i)** யேகோவாயீரே, **ii)** யேகோவாநிசி, **iii)** யேகோவாஷாலோம், **iv)** யகோவாசிட்கேனு, **v)** யேகோவா ஷம்மா, **vi)** யேகோவா சபாயோத், **vii)**யேகோவா றோப்பா, **viii)** யேகோவா மெக்கடே ஷோயம், **ix)** யேகோவா ரோஹி, **x)** யேகோவா ஈலியோன், **xi)** யேகோவா ஓசேனு, **xii)** யேகோவா மாக்கே என அழைத்தனர்.

4) அற்புத அடையாளங்கள் செய்து தாம் சர்வ வல்லமை உடையவர், நீ தெரிந்தெடுக்கப்பட்டவன் என உறுதிபடுத்துகிறார். (3:12)

5) எதிரிகளிடமிருந்து நமக்கு பாதுகாப்பைக் கொடுக்கிறார். **(3:20-22, 4:8,9, 4:11)**

கடவுளின் அழைப்பும் அது சுமத்தும் பணியும் கடினமானவை என உணர்த்த மோசே பொறுப்பினை ஏற்க விரும்பாமல் ஐந்து முறை சாக்கு போக்குகளைச் 3:11, 3:13, 4:1, 4:10, 4:13 சொல்லி தட்டிக் கழித்த போது, பொறுமையாய் பதலளித்த தேவன் இறுதியில் கோபம் கொண்டு உன் சகோதரனாகிய ஆரோன் உனக்கு வாயாக இருப்பான், அவன் உன்னை சந்திப்பான் என்று கூறி உன் உயிரைப் பறிக்கத் தேடியவர்களே எல்லோரும் இறந்து விட்டார்கள் என ஆறுதல்படுத்திய போது மோசே உடன்படுகிறார். வ.**19b** – வசனத்தை மத்தேயு பயன்படுத்தி இயேசு கிறிஸ்துவுக்கு பொருத்தமானதாகக் கையாளுகிறார் (மத்.2:20) யோசேப்பை அறியாத பார்வோன் (1:8) முதலாம் தட்மோஸ் என்றும், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வெளியேறிப் பயணம் தொடங்கும்போது இருந்த பார்வோன் இரண்டாம் அமினோதேப் என்றும் சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தன் குடும்பத்துடன் மோசே எகிப்து நோக்கி பயணித்த போது கர்த்தர் மோசேக்கு எதிர்பட்டு அவனைக் கொல்லப் பார்த்தார் என்ற சம்பவம் புதிராக இருக்கிறது. இஸ்ரவேலரை தன் குமாரன் என்றும், தன் சேஷ்டபுத்திரன் என்றும் (4:22) உரிமையோடு கூறுகிறார். இந்நிலை எய்த அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையின் அடையாளம் விருத்தசேதனம். இது ஒரு சமூகக் சடங்காகவும், சமயச் சடங்காகவும் இருக்கிறது. ஆனால் மோசே தம் பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்யத் தவறியதால் ஆண்டவர் மோசேயைக் கொல்லப் பார்த்தார். சூழ்நிலையைச் சரியாய் புரிந்து கொண்ட ஆசாரியனின் மகளும், ஆபிரகாமின் வழித்தோன்றலுமாய் மோசேயின் மனைவி சிப்போராள் விவேகமாய், விரைவாய் தன் மகனுக்கு விருத்தசேதன் செய்து (ஆதி.17:14) மோசேயைத் தப்புவிக்கிறான்.

யாத்திராகம் முதல் நான்கு அதிகாரங்களில் சொல்லப்பட்டிருக்கும் சம்பவங்களில் பெண்களின் பங்கு மிக முக்கியமானதாகவும் திருப்பு முனையாகவும் நமக்கு மாதிரியாகவும் இருக்கிறது. முதலாவதாக தேவனுக்குப்



பயந்து செயல்பட்ட தலைமை மருத்துவச்சிகள்: அரசனின் அநீதியான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் எபிரேய ஆண் பிள்ளைகளைத் தப்புவித்தனர். அடுத்ததாக தேவனுடைய கிருபையினால் பெற்ற பிள்ளை மோசேயைக் காப்பாற்ற முடியும், யாருக்குத் தெரியும் இப்பிள்ளையின் மூலம் தம் ஜனம் காப்பாற்றப்படலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரசனின் கட்டளைப்படி நதியில் போடாமல் காப்பாற்றினார் அன்னை யோகெபேத். மூன்றாவதாக நதியில் கண்டெடுத்தக் குழந்தை எபிரேயரின் பிள்ளை என அறிந்தும் தன் குமாரானாக எண்ணி, மோசே என பெயரிட்டு அரண்மனையில் ராஜகுமாரனைப் போன்று பல கலைகளில் தேறினவனாக்கிய பார்வோனின் குமாரத்தி, நான்காவதாக குழந்தையின் தாயே பாலூட்டி, சீராட்டி எவ்வித அச்சமுமன்றி தாயின் அரணைப்பில் 3-5 ஆண்டுகள் வளரவும், அவனது வளர்ப்புக்கு சம்பளமும் பெறும்படி மிக ஞானமாய் பேசிய மோசேயின் உடன்பிறந்த சகோதரி மிரியாம். இறுதியாக மோசேயின் மனைவி சிப்பிராளின் நடவடிக்கை. என்னே! பெண்களின் துணிச்சல்,நேர்மையான அன்பான, ஞானமும் விவேகமுள்ள விவகேமானசெயல்பாடுகள், முன்மாதிரியான இப்பெண்களைப் போல் தேவனுடைய திட்டங்கள் தடங்கல் இன்றி நடத்தப்பட நாமும் துணிகின்றோமா?

## II. வேதாகமப் புதிர் - 40

**யாத்திராகமம் 29 – 32 அதிகாரங்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கூ | டை | ள் | த | ட் | ன் | து | த் | கி | யூ |
| ப | டை | கி | லை | ர் | கை | பா | ர் | ண் | தா |
| ரு | தி | யி | யி | யி | யா | ல் | ல் | க் | ப |
| வா | ச | லி | லே | யா | னி | கி | க் | அ | ட் |
| து | ய | ளி | லி | ளி | ரு | ச | லே | க | ட |
| ப் | நா | கொ | கா | த் | க | யி | யி | வ | ய |
| கி | த் | ஞ் | க | க | கை | வை | டி | றி | த் |
| எ | ர் | ச | ர | தொ | ற | இ | அ | வா | தை |
| கு | ட | ம் | ம | த | ர் | தா | த் | ரி | பூ |

1.இவ்வேத பகுதியில் உள்ள 21 வார்த்தைகள் குறுக்கும் நெடுக்குமாக, வல இடமாக, மேலும் கீழுமாக இடம் பெற்றிருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்து வசன இருப்பிடம் எழுதி வரிசைப்படுத்தவும்.

2. சிதறியுள்ள 24 எழுத்துக்களை ஒழுங்குப்படுத்தினால் மோசே பாளையத்தின் வாசலில் நின்று தவறு இழைத்த இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து கேட்ட கேள்வி வெளிப்படும்.

**II. வேதாகமப் புதிர் - 39 விடை**

**எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. யாத்.25:8**